# காலங்கள்தோறும் இசையியல் வளர்ச்சி

**முனைவர். ஆர். சீதாலட்சுமி**

**இசையியலாளர்**

## ஆய்வுநோக்கம்

சங்ககாலம் முதல் சமகாலம்வரை இசையியல் பற்றிய செய்திகள் பல நூல்களில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

“கல்தோன்றிமண்தோன்றாகாலத்தே

முந்தோன்றியமூத்தகுடி” யாம்

தமிழின்வளர்ச்சியும்தமிழால்சமுதாயம்அடைந்தவளர்ச்சியும்அளப்பரியது. இயல், இசை, நாடகம்என்னும்முத்தமிழானது, பாண்டியர்கள்பொற்காலஆட்சிமுறையில்முதல்இடை, கடைஎனசங்கம்வைத்துபோற்றப்பட்டது. இயற்றமிழில்இசையின்தொன்மையையும், பெருமையையும்உலகிற்குஎடுத்துரைத்ததமிழின்பெருமைஈடினையற்றதுஎனலாம்.

இசையியல்என்னும்பெரும்கடலைநீந்திக்கடப்பதுஎளிதன்று. எனினும்காலங்கள்தோறும்இசையியல்எவ்வாறுவளர்ச்சிகண்டதுஎனவரையறுக்கலாம். தமிழ்இசைஇலக்கியவரலாற்றினைஉற்றுநோக்கினால், சங்ககாலம்முதல்சமகாலம்வரைதமிழிசைஎவ்வாறுசிறப்புற்றுள்ளதுஎன்பதுவிளங்கும்.

இரண்டாயிரம்ஆண்டுகளுக்குமுன்னரேபழந்தமிழில், ஐந்திணைப்பாகுபாட்டினுள்யாழ்மற்றும்முரசுபற்றியும்ஐந்திணைக்குரிய வெவ்வேறுஇசைக்கருவிகள்பற்றியசெய்திகளையும்அறியமுடிகிறது.

**சங்ககாலம்**

சிலப்பதிகாரம்எனும்பெருங்காப்பியமேநமக்குஇசைமற்றும்நாடகத்தை ப்பற்றிமிகவிரிவாகநமக்குக்கூறும்நூலாகஅமைந்துள்ளது.

இந்நூல்இசைக்கானகருவூலம்என்றேசொல்லலாம். மக்களின்அன்றாடவாழ்க்கையில்இசைஇடம்பெற்றிருந்தவிதம்சிலப்ப திகாரத்தில்காணப்படுகிறது. மேலும்குழலாசிரியன், யாழாசிரியன், பாடலாசிரியன், தண்ணுமையாசிரியன், ஆடலாசிரியன்இவர்களின்அமைதிபற்றிமிகவிரிவாகஎடுத்துரைக்கும் நூலாகசிலப்பதிகாரம்உள்ளது.

பண்மற்றும்பாலைபற்றியசெய்திகள்அவற்றின்வேறுபாடு, பண்பாடும்முறை, பண்ணமைக்கும்பாங்குஇதுஅனைத்தும்சிலம்பில்உள்ளங்கைநெல்லிக் கணியாகதெரிகிறது.

**தொல்காப்பியம்**

காலத்தால்மிகவும்பழமையானநூலாகவிளங்கும்தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள்ஆகியவற்றைவிரிவாகபேசும்போதுஎழுத்திற்கும், இசைக்கும்உள்ளதொடர்புகூறப்பட்டுள்ளது. நாடகவழக்கு, செய்யுள்வழக்குஎனஇருவகையாகப்பிரிக்கலாம். அளபெடைபற்றியசெய்திகள்காணக்கிடைக்கின்றன. தேவபாணிஎன்னும்பண்டையகாலத்துஇசைபற்றியகுறிப்புகாணப்படுகி றது.

**பத்துப்பாட்டு**

சுமார்இரண்டாயிரம்ஆண்டுகளுக்குமுன்னதாகவிளங்கும்சங்கஇலக்கியநூலாகும்.
தமிழ்நாட்டில்வாழ்ந்தநானூறுக்குமேற்பட்டபுலவர்கள்பாடிய 2380 தனிப்பாடல்களைக்கொண்டதொகுப்பாகஅமைந்துள்ளது.திருமுருகாற்றுப்படையில்அதிகஅளவில்இசைச்செய்திகள்இடம்பெறவில்லைஆயினும்முரசு, பண்மற்றும்ஆடல்மகளிரின்கூத்துவகைகூறப்பட்டுள்ளது. பொருநாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படைஎன்னும்மலைபடுகடாம்ஆகியவற்றில்இசையின்செய்திகள்அதிகமாகக்கிடைக்கின்றன. முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டிணப்பாலை, குறிஞ்சிப்பாட்டுஆகியவற்றிலும்இசைச்செய்திகள்காணப்படுகின்றன.
எட்டுத்தொகைநூல்களில்பண், யாழ், முரசு, பாணர்கள்பற்றியசெய்திகள்அறிந்துகொள்ளலாம்.

## இயல்இலக்கணநூல்களில்இசை

இசையியல்ஆராய்ச்சிஎனும்தலைப்பினையொட்டிஆராய்ந்தோமேயானால்பற்பலஇயல்இலக்கணநூல்களில்இசைகாலம்தோறும்வளர்ச்சிகண்டுள்ளதுபற்றிஅறியலாம்.

## இறையனார்களவியல்இசைக்குறிப்புகள்

இந்நூல் 8-ம்நூற்றாண்டைச்சேர்ந்ததாகத்தெரிகிறது. கந்தர்வவேதம்என்றுகூறப்படும்இசையானதுஎவ்வாறெல்லாம்வளர்ச்சிகண்டதுஎன்றுஇந்நூல்பகர்கிறது.
யாழ்பற்றியஅரியசெய்திளைஇந்நூலின்வழியேஅறியலாம்.
ஐந்துவகைநிலங்களும்அவற்றிற்குரியபறையும், பண்ணும்பற்றியவிரிவாககூறப்பட்டுள்ளது.

**குறிஞ்சிநிலத்திற்கு**:

பறை - வெறியாட்டுபறை, தொண்டகப்பறை

யாழ் - குறிஞ்சியாழ்

பண் - குறிஞ்சிப்பண்

**நெய்தல்நிலத்திற்கு**:

பறை - மீன்கோட்பறை, நாவாய்பறை

யாழ் - விளரியாழ்

பண் - செவ்வழிப்பண்

**மருதம்நிலத்திற்கு**:

பறை - மணமுழவு, நெல்லரிகிணை

யாழ் - மருதயாழ்

பண் - மருதப்பண்

**முல்லைநிலத்திற்கு**:

பறை-முரசு, மன்றுகோட்பாறை

யாழ் - முல்லையாழ்

பண் - முல்லைப்பண்

**பாலைநிலத்திற்கு**:

பறை-பூசல்பறை, நிரைகோட்பறை

யாழ் - பாலையாழ்

பண் - பழம்பஞ்சுரம்

இவ்வாறானகாந்தர்வவேதம்என்றேசொல்லப்படுகின்றஇசைக்குஇலக்கணமும்இறையனார்களவியலில்காணமுடிகிறது.

**புறப்பொருள்வெண்பாமாலை**:

தமிழர்கள்வாழ்க்கையில்இசைஊடுருவிஇருந்தத்தைபுறத்திணைஇலக்கணநூலாகியபுறப்பொருள்வெண்பாமாலைஎன்றநூலின்மூலம்அறியமுடிகிறது. இதன்காலம்கி.பி (850 - 875) என்றுஅறியலாம்.அக்காலமக்கள்யாழைஎவ்வாறுபயன்படுத்தினர்என்பதுஇதன்முலம்விளங்குகிறது.

யாழ்ப்பாணர்பற்றியகுறிப்புகள்காணப்படுகின்றன.

“நல்லிசையான்மலிந்தயாழினைவல்லபாணன்”;

பண்ணியல்யாழொடுபாணனார்வந்தார்;

என்றசொற்றொடர்கள்இடம்பெறுகின்றன. தடாரிப்பறை, தண்ணுமை, பல்லியம்போன்றஇசைக்கருவிகள்கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பண், விளரிப்பண்பற்றியகுறிப்புகள்உள்ளன.

மேலும்இசைநுணுக்கங்களானவலிவு, சமன், மெலிவுஎன்கிறவாசிப்புமுறையையும்கூறியுள்ளார்நூலாசிரியர்.தாளத்தையும்அதன்வகைகளையும்தூக்குபற்றிகூறும்போதுவிளக்கியுள்ளார்.

இறுதியாகயாழ்வென்றி, பாடல்வென்றி, பிடிவென்றிஆகியபாடல்களும்அதன்இசைசெய்திகளும்கூறப்பட்டுள்ளன.

இந்நூலின்காலம்தேவாரக்காலத்தைஅடுத்தகாலமாககருதப்படுகிறது.

**நிகண்டுகளில்இசை**

நிகண்டுஎன்பதுவடமொழிச்சொல்வடமொழியில்ஆறுஅங்கம்என்றுசொல்லப்படுக்கின்றசிட்சை, வியாகரணம், சந்த்ஸ், நிருத்தம், ஜோதிடம், கற்பம்எனும்ஆறினுள்மூன்றாவதானநிருத்தத்தின்பிரிவு.நிகண்டுஎன்பதுவேதச்சொற்களின்பொருளைவரையறைசெய்வது.

தமிழில்சொற்பொருளைஉணர்த்தும்இந்தநூலுக்கேஉரிச்சொல்எனப்பெ

யர்கொடுத்தார்கள்.
தமிழ்நிகண்டுகள்பொதுவாகப்பன்னிரண்டுபிரிவுகளாயிருக்கும்இவற்றுள்பத்தாம்பிரிவுஒலிபற்றியபெயர்த்தொகுதிஎன்றுசொல்லப்படும்இசைஒலியின்பால்அமையும்ஆதலால்இசைபற்றியஒலிவிதிகள்யாவும்இப்பிரிவுனுள்காணப்படுகிறது.

இன்றுகிடைக்கின்றநிகண்டுகளில்காலத்தால்பழமையானவைதிவாகரமும்பிங்கலமும்ஆகும்.
இவைஇரண்டும்இவற்றைச்செய்தஆசிரியரால்பெயர்பெற்றவை.
இவற்றின்காலம்சுமார்கி.பி880, 955
என்றுவரையறைசெய்யலாம்திவாகரம்வள்ளைப்பாட்டு,
இசைப்பாட்டுஎன்றதலைப்புக்களில்தொடங்கி 40
சூத்திரங்களில்இசைச்செய்திகளைவிவரிக்கிறது.
இவ்விருநூல்களும்தமிழிசைஇலக்கியவரலாற்றில்இரண்டாங்காலத்துக்குரியவை. பிங்கலம், 70
சூத்திரங்களுக்குமேலாகஇசைச்செய்திகளைத்தருகிறது.
இவருக்குமுன்இடைக்காலத்தில்பஞ்சமரபுஎன்றஇலக்கணநூல்உருவாகிருக்கலாம்என்றுதோன்றுகிறது.
இதன்மூலம்சமூகத்தில்இசைஎவ்வாறுவிரிவடைந்துவந்ததுஎன்பதைஅறியமுடிகிறது. இசைப்பாட்டின்பெயர்களாகபாணி, வரி, இசை, கானம், கௌளை, பண், கீதம், காந்தர்வம், கேயம், காமரம்ஆகியவற்றைஇந்நூல்கூறுகிறது. பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழிஆகியநாற்பெரும்பண்களைப்பற்றியும்கூறப்பட்டுள்ளது.குரல், துத்தம். கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்ஆகியஸ்வரங்கள்பற்றிகூறப்பட்டுள்ளன.
மேலும்இந்தஏழுஸ்வரங்களின்வாயிலாககுரல்குரலாயதுசெம்பாலை,
துத்தம்குரலாயதுபடுமலைப்பாலை;
கைக்கிளைகுரலாவதுசெவ்வழிப்பாலை;
உழைகுரலாயதுஅரும்பாலை; இளிகுரலாயதுகோடிப்பாலை,
விளரிகுரலாயதுவிளரிப்பாலை;
தாரம்குரலாயதுமேற்செம்பாலைஎன்றஏழுபாலைகளைப்பற்றியும்கூறப்

பட்டுள்ளது. மேலும்இந்நூலில்ஏழிசைதம்மில்பிறக்கும்வகை; அவற்றின்மாத்திரை; ஓசைநயம், ஏழிசைக்குரியமனம், சுவை, ஏழிசைக்குரியஅதிதேவதை, மந்தஇசை, சமனிசை, வல்லிசை, இசைவிகற்பம்ஆகியனபற்றியநுணுக்கங்கள்கூறுப்பட்டுள்ளன.

**திவாகரநிகண்டு**

சேந்தந்திவாகரன்என்பரால்,
திவாகரநிகண்டுஒன்பதாம்நூற்றாண்டின்இறுதியில்எழுதப்பட்ட்தாகத் தெரிகிறது. பின்னால் 11 -12ம்நூற்றாண்டுகளில் (அரும்பதவுரைகாரர், அடியார்க்குநல்லார்) பண், பண்ணியல், திறம், திறத்திறம்என்பனபற்றியசெய்திகளைதெரிந்துகொண்டகாலத்தில், 9-ம்நூற்றாண்டிலேயேஇசையின்பண்பற்றியநுணுக்கங்களைஇந்ததிவாகரநிகண்டுஎடுத்துக்கூறியதுசிறப்பாகும்.

“பேரியாழ்சகோடயாழ்மகரயாழ்செங்கோட்டு

யாழெனும்நான்கும்நால்வகையாழ்ப்பெயர்” (திவா 1873)

மேலும்பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ்என்பதுநான்குபெரும்பண்களாகும்.
இதைத்தவிரநைவளம், நோதிரம், காந்தாரம், சாதாரி, முல்லைப்பண்எனப்படும்தற்போதையமோகனம்ஆகியனபற்றியும்இந்நூல்விளக்குகிறது. எழுபாலைகளும்சொல்லப்பட்டுள்ளன.

**பிங்கலநிகண்டு**

திவாகரநிகண்டின்காலத்திற்குஅடுத்துவந்ததுபிங்கலம்.
பிங்கலந்தைஎன்றும்சொல்லப்படும்.
திவாகரநிகண்டைவிடவிரிவானதுஇதன்ஆசிரியர்பிங்கலர்.
இசைப்பகுதியில்பண்,

யாழ்பற்றியவிவரங்கள்விரிவாகக்கிடைக்கின்றன.
அச்சிடப்பட்டபுத்தகத்தில்ஆறாவதுஅனுபோகவகைஎன்றதொகுதியில் ஆறாவதுஇசைவகைஎன்றபிரிவு 1374 முதல் 1443 வரையுள்ள 70 சூத்திரங்களால்இசைச்செய்திகள்கூறப்பட்டுள்ளன.
இதன்இசைப்பகுதியில்

“கானம்கெளளையேவரிகந்தருவம்கீதம்இராகம்கெயம்பாணி

நாதம்இசைபண்காமரம்பாட்டே” (1374)

போன்றவரியின்மூலம்இசையின்விதங்களைஅறியமுடிகிறது.

“பாலைகுறிஞ்சிமருதம்செவ்வழியென

நால்வகையாழாம்நாற்பெரும்பண்ணே”

என்கிறதுபிங்கலநிகண்டு. மேலும்குறிஞ்சியாழ்திறன்வகைகள், மருதயாழ்திறன்வகைகள், செவ்வழியாழ்திறன்வகைகள்என 103 பண்களைஇந்நூல்விரிவாககூறுகிறது.

திவாகரத்தில்கண்டஇசைசெய்திகள்பிங்கலநிகண்டில்மேலும்பண்மடங்குமுறைப்படுத்திவிரிவாக்கப்பட்டுள்ளது. இவ்விருநூல்களின்காலம் 9ம் - 10ம்நூற்றாண்டு.
அடுத்தநிகண்டுகள்காங்கேயர்செய்தஉரிச்சொல்நிகண்டு - வெண்பாயாப்புஅளவில்மிகவும்சுருங்கியது. 14 - ம்நூற்றாண்டைச்சேர்ந்தது.
அடுத்ததுதேவகயாதரர்என்பவர்செய்தகயாதரநிகண்டு. இது 15ம்நூற்றாண்டைச்சேர்ந்தது. கட்டளைகலித்துறைச்சேர்ந்தது. மொத்தம் 566 பாடல்களைக்கொண்டது. இதுவும்அளவில்சிறியது.இவ்விரண்டுநூல்களிலும்இசைச்செய்திகள்இரண்டுமூன்றுஅடிகளைஇடம்பெறுகின்றன.
அடுத்ததாகவீரமண்டலபுருடர்என்பவர்செய்தசூடாமணிநிகண்டு. 16 - ம்நூற்றாண்டைச்சேர்ந்தது. 1197விருத்தப்பாடல்களில் 12 பாடல்களில்மட்டுமேஇசைப்பற்றியசெய்திகள்இடம்பெறுகின்றன.

இவ்வாறானநிகண்டுகளைப்பற்றியசெய்திகளைநோக்குங்கால்சிலப்பதி காரகாலம்தொட்டுசம்பந்தர்காலத்திலும்அதன்பிறகுசோழர்களின்ஆட்சி காலத்திலும்பெருவளர்ச்சிபெற்றிருந்தது.
பின்னர்படிப்படியாகஅதன்வளர்ச்சிகுன்றியதுஎனலாம்.

**யாப்பருங்கலவிருத்தியில்இசைக்குறிப்புகள்**

11-ம்நூற்றாண்டில்எழுதப்பட்டநூலானயாப்பருங்கலவிருத்தியில், ஒழிபியலுள்சித்தரகவிமாலைஎன்று 29
அடிகள்கொண்டஒருநீண்டஆசிரியப்பாதரப்பட்டுள்ளது.
இதில்மாலைமாற்றுத்தொடங்கிதந்திரஉத்திதர்க்கம், நடனம்என்பதுவரைபலவகையானசித்திரக்கவிகள், நால்வகைக்கவியின்இலக்கணம்அவையின்அமைதி, செய்யுள்குற்றம்முதலியவிவரங்களைசொல்லிசிலஇசைச்செய்திகளும் கூறப்பட்டுள்ளது.
பிற்காலத்தில்இசையின்மிகமுக்கியமானஅம்சமாகவிளங்கியஸ்ருதிக ளின்அலகுகளின்எண்ணிக்கை (4 3 2 4 4 3 2) குறிப்புயாப்பருங்கலவிருத்தியில்கூறப்பட்டுள்ளது. பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ்ஆகியநான்குவகைப்பண்கள்பற்றியசெய்திகள்கிடைக்கி ன்றன. ஏழுபெரும்பாலைகளாகியசெம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலைஆகியனபற்றியகுறிப்புகள்இசையின்வளர்ச்சியினைஉ யர்த்தும்வண்ணம்அமைந்துள்ளன. மேலும்செந்துறைமார்க்கம், வெண்துறைமார்க்கம்பற்றியும்கூறப்பட்டுள்ளது.
பலபாடல்கள்இசைப்பாடல்கள்இசைப்பாடல்உருவத்தில்உள்ளன.

யாப்பருங்கலவிருத்தியின்இசைச்செய்திகளைஆராயும்போதுதற்கால இசைஉருப்படிகள்போன்றஇசைப்பாடல்கள்இடம்பெற்றிருந்ததுஎன்பது அறியமுடிகிறது.
கீர்த்தனைவடிவம்சங்ககாலத்திலேயேஇருந்திருக்கக்கூடும்என்பதுஇந் நூல்கூறும்செய்தி. மேலும்இந்நூலினைஊன்றிநோக்கும்போது,

இயற்றமிழ்நெறியில்யாப்பருங்கலவிருத்திமேலானஇலக்கணஇலக்கியச்செய்திகளைக்கூறுவதாகப்புலப்படுகிறது.

**வீரசோழியம்**

பதினொன்றாம்நூற்றாண்டில்சோழநாட்டில்ஆட்சிபுரிந்தஇராஜகேசரிவீரராஜேந்திரன்என்றசோழசக்கரவர்த்தியின்காலத்தில் (1018 - 1070) பொன்பற்றிஎன்றஊருக்குத்தலைவனாயிருந்தபுத்தமித்திரன் ( புத்தசமயத்தைச்சார்ந்த) என்றதலைவனால்இயற்றப்பட்டஐந்திலக்கணநூல். கட்டளைக்கலித்துறையால்ஆனஇந்நூல் 181 பாக்களைக்கொண்டது. பெருந்தேவனார்உரைசெய்துள்ளார். இந்நூலில்அலங்காரபடலத்தில்இறுதியில்இசைச்செய்திகள்கூறப்பட்டுள்ளன. ஆனால்இன்னொருகருத்தும்நிலவுகிறது.யாதெனில்மேற்கூறப்பட்டஇசைச்செய்திகள்மூலத்தில்இல்லைஎன்றும்பெரும்தேவனார்தம்உரையின்பூர்த்திக்குவேண்டிஇவற்றைச்சேர்த்துகூறுகிறார்என்பதேஅக்கருத்து.

ஏழுநரம்புகள், நால்பெரும்பண்கள், திறங்கள்மற்றும்ஏழ்பெரும்பாலைபற்றியசெய்திகள்விரவியுள்ளன.இயற்றமிழ்இலக்கணநூலாசிரியர்தம்உரையுள், இசைத்தமிழ்ச்செய்திகள்சிலவேனும்சொல்லநினைத்ததுபாராட்டலுக்குரியதுஎன்றுமு. அருணாச்சலம்அவர்கள்தமிழ்இசைஇலக்கியவரலாறுநூலில்குறிப்பிடுகிறார்.

மேலும்அந்நூல்அச்சிடப்பட்டகாலம்தமிழிசையுணர்வும், இலக்கணஅறிவும்வளர்ச்சிபெறாதகாலமாகஇருந்ததினால்ஏட்டிலிருந்துத்திருத்தமாகஎழுதப்பெறவில்லைஎன்றும்கூறியுள்ளார், பாலையாழ்த்திறன், குறிஞ்சியாழ்த்திறன், மருதயாழ்த்திறன், செவ்வழியாழ்த்திறன்ஆக 21 திறன்கள்கூறப்பட்டுள்ளது.

மேலும்இந்நூலைப்பற்றியமுக்கியகுறிப்புகள்ஒன்றைமு. அருணாச்சலம்அவர்கள்முன்வைக்கிறார்.

உரையாசிரியர்ஐந்திலக்கணமும்கூறும்இயற்றமிழுக்கேஉரையெழுதவந்தார்என்றும்இசைத்தமிழ்அக்காலத்தில்ஓங்கிநின்றது. நூலாசிரியர்வீரராஜேந்திரன்படைத்தலைவராய்இருந்தவர். இம்மன்ன்ன்இராஜராஜசோழமன்னனுக்குபேரனாவார். அக்காலத்தில்இசைமிக்கஅட்சிபெற்றிருந்தது. இதுபெரிதும்பாராட்டக்குரியது. இதன்மூலம்இசையின்முக்கியத்துவம்நன்குஉணரமுடிகிறது.

**மாறன்அலங்காரம்**

16-
ம்நூற்றாண்டில்திருக்குருகூரில்வாழ்ந்ததிருக்குருகைப்பெருமாள்கவிராயர்என்றபெயருடையவைணவப்பெரும்புலவர்மாறனாகியநம்மாழ்வாரைச்சிறப்பித்துப்பாடியஅணிஇலக்கணநூல். இதுமிகவிரிந்தநூல். மிகவிரிவானஉரையும்உடையது.

இந்நூல்வகைமுதல்அடுக்குஅலங்காரம்என்பதற்குஎடுத்துக்காட்டாகஇவர்இரண்டுபாடல்களைதருகிறார். அதில்இரண்டாவதுபாடலில்பண், இராகம்இந்தஇரண்டின்வகைகளையும்பொதுப்படத்தொகுத்துஅடுக்கிச்சொல்லுகிறார்.

**இந்தளம்முகாரிகுச்சரிபௌளிமலைமைசீராகம்வயிரவிதனாசா**

**கிரிவசந்தன்பழம்பஞ்சுரம்கொல்லிமருளிந்தலிர்சாதாரிசா**

**மந்தமல்லாரிபந்துமுகாரிஆரியவராடிகொல்லவராடிநை**

**வளமிராமக்கிரிகுறிஞ்சிகாம்போதிபூவாளிசௌராட்டம்நாட்டை**

**செந்திருதியருமவதிதக்கேசிகௌடிகௌசிகம்மேகராகக்குறிஞ்சி**

**செவ்வழிப்பாலைவிளரிப்பாலைசெம்பாலைசீகாமரம்சிகண்டி**

**அந்தாளிமலகரிநளுத்தைகாந்தாரம்முரலளிசெறியும்**

**வகுளமார்பன்**

**அமலன்வருகைதண்டிகைவாழ்வினைக்காணஆயிரங்கண்**

**வேண்டுமே**

இப்பாடல்வருளமார்பராகியநம்மாழ்வார்கனகதண்டிகையில்பவனிவரு ம்காலத்துஅவரைவாழ்த்திதுதிப்பதாகஅமைந்துள்ளது.

மேலும்பெரும்நூல்களானமணிமேகலையில்இசைபற்றியசெய்திகள்இ ரண்டுஇடங்களில்மட்டுமேஉள்ளது.
சிலப்பதிகாரத்தின்தொடர்நூலாகஇக்காப்பியம்கருதப்படுகிறது.

**பெருங்கதை**

“ப்ருஹத்கதா” என்றவடமொழிநூலின்தழுவலாகஎழுதப்பட்டநூலாகும்.
16
ஆயிரம்அடிகளுக்குஅதிகமானஆசிரியஅடிகளைக்கொண்டபெருநூல்.
காப்பியத்தலைவன்உதயணனின்யாழ்திறனேஇந்நூலின்முக்கியசெய்தி யாகஉள்ளது.

**சீவகசிந்தாமணி**

9-
ம்நூற்றாண்டில்திருத்தக்கதேவர்என்றசைனத்துறவிபாடியஒருசைனப் பெருங்காப்பியம். நூலின்முக்கியவிவரமேகதையின்நாயகன்சீவகன், காந்தருவதத்தையோடுசெய்யும்யாழ்ப்போர்ஆகும்.

**இசைக்கலையைப்பற்றிகூறும்போது**

“பண்ணல்பரிவட்டணைஆராய்தல்தைவரல்கண்ணியசெலவுவிளையாட்டுக்கையூழ்நண்ணியகுறும்போக்கு”

என்னும்செய்யுளில்கலைத்தொழிலின்எட்டுவகைகள்கூறப்பட்டுள்ளது.

**கல்லாடம்**

10-ம்நூற்றாண்டில் ‘கல்லாடர்’ என்றபுலவரால்அகப்பொருள்நூலாகஇயற்றப்பட்டுள்ளது. இவற்றிலும்இசைச்செய்திகள்காணப்படுகிறது. தாளக்கருவிகள்பற்றியசெய்திகள்மிகஅழகாககூறப்படுகிறது.

மேலும்சூளாமணி, கலிங்கத்துப்பரணி, பெரியபுராணம், நளவெண்பா, யசோதரகாவியம்,அரிச்சந்தரவெண்பா, ஆகியநூல்களிலும்இசைச்செய்திகள்காணப்படுகின்றன.

**சமகாலஇசையியல்இலக்கியங்கள்**

19-ம்நூற்றாண்டில்இவ்வாறுவளர்ச்சிகண்டஇசையியல்நூல்கள்ஆப்ரகாம்பண்டிதர்எழுதியகருணாம்ருதசாகரம். மாணிக்கமுதலியார்எழுதியசங்கீதசந்திரிகை, அரிகேசநல்லூர்முத்தையாபாகவதர்எழுதியசங்கீதகல்பத்ருமம்ஆகியநூல்கள்இசையியலைஅதன்உச்சிக்கேகொண்டுசென்றது. மதுரைபொன்னுச்சாமிப்பிள்ளையவர்களின்பூர்வீகசங்கீதஉண்மைஎனும்நூல்இசையின்பலகோணங்களைதெளிவாகவிளக்கியுள்ளது.

இருபதாம்நூற்றாண்டின்இசைக்கலைப்பொக்கிஷமாகவிளங்குவதுவிபுலானந்தஅடிகள்எழுதிய ‘யாழ்நூல்’ ஆகும். ‘மதங்கசூளாமணி’ என்னும்நூலினைஇயற்றியவரும்இவரே. யாழ்நூலில்பாயிரவியல், யாழ்உறுப்பியல், இசைநரம்பியல், பாலைதிரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழியியஆகியஏழுபகுதிகளைக்கொண்டபெருநூலாகவிளங்குகிறது.

திரு
கோமதிசங்கரஐயர்அவர்கள்எழுதியவிரிவானஇசைத்தமிழ்இலக்கணவிளக்கம்என்றும்நூலினைஎழுதியுள்ளார்.
இவர்சிதம்பரம்அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில்வீணைஆசிரியராகப்பணிபுரிந்துஓய்வுபெற்றபின்மேற்குறிப்பிட்டநூலினைஎழுதிவெளியிட்டுள்ளார்.

19-
ம்நூற்றாண்டின்இறுதியில்கங்கைமுத்துப்பிள்ளைஎன்றமேளக்காரர்எழுதிய
'நடனாதிவாத்தியரஞ்சனம்'எனும்நூல்இசைமற்றும்நடனம்பற்றியகணக்கற்றசெய்திகளைகொண்டுள்ளது.

ஆசிரியர்க.
வெள்ளைநிவாரணம்என்பவர்எழுதியஇசைத்தமிழ்எனும்நூலும்தமிழிசையின்ஆழத்தைஎடுத்துரைக்கிறது.

**முடிவுரை**

இசைஎப்படிகடலுக்குஒப்பானதோஇசையியலும்அதனைப்பற்றியஆராய்ச்சியும்கடல்போல்விரிந்துபரந்ததே. எத்தனைநூல்கள்வந்தாலும், இசையில்இன்னும்கூறப்படாதபலபரிமாணங்கள்ஆராய்ச்சிக்காகஇருந்துகொண்டேஇருக்கும்.
சங்ககாலம்தொட்டுசமகாலம்வரைபல்வேறுநூல்கள்வெளிவந்துள்ளபோதிலும்இசையின்முழுஇயலும்பூர்த்தியாகிவிட்டதுஎன்றுகூறுவதற்குஇல்லை. வரும்தலைமுறைஇசைஆர்வலர்கள், மாணவர்கள், கலைஞர்கள்மேலும்பலமுயற்சிசெய்தால்இசையியல்பற்றியஇலக்கியங்கள்இன்னும்பல்கிபெருககாலம்வழிவகுக்கும்

i

1. தமிழ்இலக்கியவரலாறு - Dr. ரா. சீனிவாசன், அணியகம்பதிப்பு 1978 - 1997
2. தமிழ்இசைஇலக்கியவரலாறு - மு. அருணாசலம், கடவுபதிப்பகம் - 2009(தொல்காப்பியம்-பக்கம் - 19/30, ழ - http;// www.tamilvu,org - மெய்யப்பன்தமிழாய்வகம் - பேரா. க. வெள்ளைவாரணனார்,
3. பத்துபாட்டு- பக்கம் - 34,
4. இறையனார்களவியல்இசைக்குறிப்புகள் -பக்கம் -169,
5. புறப்பொருள்வெண்பாமாலை -பக்கம் - 170,
6. நிகண்டு - பக்கம் 173/174/179,
7. யாப்பருங்கலவிருத்தி -பக்கம் - 186,
8. வீரசோழியம் -பக்கம் - 194,
9. மாறன்அலங்காரம் -பக்கம் - 195,
10. பெருங்கதை -பக்கம்- 199,
11. சீவகசிந்தாமணி - பக்கம் - 202,
12. கல்லாடம் - பக்கம்- 207,
13. கருணாம்ருதசாகரம்-https;//www.dinamani.com
14. தமிழ்இசைஇலக்கணவரலாறு - மு. அருணாசலம், கடவுபதிப்பகம் - 2009
15. சங்கீதசந்திரிகை - https;//www.tamildigitallibrary.in
16. பூர்வீகசங்கீதஉண்மை - https;//www.tamildigitallibrary.in
17. S.kalpadrumam - https;//musicacademymadras.in
18. யாழ்நூல்- https;//www.hindutamil.in
19. மதங்கசூளாமணி- https;//nooiaham.org
20. நடனாதிவாத்யஞ்சனம்- https;//www.tamildigitallibrary.in
21. அபிதானசிந்தாமணி - A .சிங்காரவேலுமுதலியார், செம்பதிப்பு - 15th edition - 2016
22. தமிழ்இசைக்கலைக்களஞ்சியம்(PDF) VOL - 1, VOL - 2, VOL - 3, VOL - 4